


# சிவாகமச் சக்ரவர்த்தி
# அமரர் பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா
# அவர்களின்
# வருஷாப்திக நினைவு வெளியீடு

**24.08.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ கைலாசநாத சுவாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை ஸ்ரீ கமலாம்பிகா தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீசக்ர பூஜை விளக்கம்
# (கேள்வி பதில் வடிவில்)

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி தேவஸ்தான பரிபாலகரும் கர்த்தாவும், பிரதம சிவாச்சாரியாரும், நல்லூர் கைலாசநாத சம்ஸ்கிருத பாடசாலை அதிபரும், யாழ். பல்கலைக்கழக சம்ஸ்கிருத துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், பல ஆராய்ச்சி நூல்களை யாத்து வெளியிட்ட நூலாசிரியருமான சிவாகம சக்கரவர்த்தி

**பிரம்மஸ்ரீ ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா (M.Phil)**

**அவர்களின்**

**வருஷாப்திக நினைவு மலர்.**

**தொகுப்பாசிரியர்கள்**

**இந்து வித்தியாநிதி சிவாகம பண்டிதர் பிரம்மஸ்ரீ சோ.குஹானந்த சர்மா**

(புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்திவிநாயகர் ஆலய ஆதீனகர்த்தா குரு ஸ்தானிக குருவும், தேசிய சர்வமத ஆலோசனை சபை உறுப்பினர், சர்வமத சம்மேளன உபதலைவர்இந்துசமய நூலாசிரியர், ஒலிபரப்பாளர், ஒளிபரப்பாளர்)

**சு.நவநீதகிருஷ்ணன் (M.Phil)**

(உதவி நூலகர், யாழ். பல்கலைக்கழகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் உபாசகர்

# அமரர் பிரம்மஸ்ரீ ஸ்ரீபதி சர்மா கிருஷ்ணானந்த சர்மா

# அவர்களின் வருஷாப்திக ஞாபகார்த்த வெளியீடு

## ௨௫.08.௨015



### திதிவெண்பா

ஆண்டு புகழ் ஜயமாம் ஆவணி மூலமதில்
பூண்ட வளர் தசமியிலே - நீண்ட புகழ்
கிருஷ்ணானந்த சர்மா இறை நிழலில்
பெருவாழ்வு பெற்றார் இனிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாள் திருவருள்

சிவபதமெய்திய பிரம்மஸ்ரீ ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா அவர்களின் நீர்கொழும்பில் வசிக்கும் சகோதரியும், சகலனும் கிருஷ்ணனந்தனின் ஒரு வருட பூர்த்தியன்று அவர் நினைவாக அம்பாள் தொடர்பான ஒரு நூலை வெளியிட விருப்பம் கொண்டனர். அதற்கு இணங்க அவரது முதலாவது மாசியம் நிறைவெய்திய அன்று கந்தரோடையில் வசித்து வந்த சிவபதமெய்திய இலக்கிய கலாநிதி ஆ.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களிடம் சென்று ஆலோசனை கேட்டபோது அம்பாள் அல்லது ஸ்ரீசக்ர பூஜை தொடர்பான நூலொன்றை எல்லோருக்கும் இலகுவாக விளங்கக்கூடிய வகையில் வெளியிட்டால் நல்லது எனக் கூறி பின்னர் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு "தம்பி, குகானந்தன், கிருஷ்ணானந்தனின் நினைவாக அம்பாள் சம்பந்தமான நூலொன்றை வெளியிட அவர்களோடு நானும் விரும்புகின்றேன். நீங்கள் முன்பு வெளியிட்டது போல கேள்வி பதில் வடிவில் அமைந்தால் நன்றாக இருக்கும் என்பது எனது விருப்பம். அவர்களிடம் உங்களுக்கு ஸ்ரீசக்ர பூஜை தொடர்பான நூலொன்றையும் கொடுத்துள்ளேன். அம்பாளின் "ஸ்ரீசக்ர பூஜை பற்றி கேள்வி பதில் வடிவில் ஒரு நூலை எழுதி வெளியிடுங்கள். எனது நல்லாசிகள் எனத் தொலைபேசி ஊடாக ஆசீர்வதித்தார்.

அன்னையின் திருவருளால் ஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மாவின் நினைவாக வெளிவரும் இந்நூலை ஸ்ரீ லலிதா மஹாத்திரிபுர சுந்தரியின் பாத கமலங்களில் சமர்ப்பிக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சக்ர வழிபாடு

அகில அண்ட சராசரங்களைத் தகுதிக் கேற்றவாறு படைத்தவரும் ஜோதீஸ்வரூபமானவரும் சர்வ ஜீவ கோடிகளுக்கும் அந்தராத்மாவாக இருப்பவரும் சர்வ சக்தி வாய்ந்தவரும் சித் சொரூபமாக விளங்குபவளு மானவளே சிவசக்தி எனப்படும் ஆதிபராசக்தியாவாள். ஆதிசங்கராச்சாரிய சுவாமிகளும் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் கூட இச்சிவசக்தியை தினமும் ஆராதிக்கின்றார்களெனச் சிறப்பாகக் கூறியுள்ளதைக் காணலாம்.

இவ்வாறு இப்பிரபஞ்சத்தில் அனைத்துக்கும் மேலாக விளங்கும் ஆதிபராசக்தியாகிய அம்பிகையானவள் சிவனோடு இணைந்து சிவசக்தி ஐக்கிய ரூபினியாக விளங்குபவள். அர்த்தநாரீஸ்வர வடிவமும் சிவமும் சக்தியும் ஒன்றிணைந்து ஆன்மாக்களுக்கு அருள் வழங்கும் நிலையைக் காட்டி நிற்கிறது. சோமாஸ்கந்த வடிவிலும் இறைவன் சக்தியுடன் விளங்கும் நிலையில் உள்ளான். " சக்தியாய் சிவமாகித் தனிப்பர முத்தியான முதல்" எனும் வரிகள் சிவமும் சக்தியும் ஒன்றுக்குள் ஒன்று அடக்கம் என்பதற்கு சான்றாகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த அம்பிகையை வழிபடுவதற்கு பலவழி முறைகளை சாக்த தந்திரங்கள் கூறுகின்றன. அம்பிகையை மனதில் நினைத்து மனச்சுத்தி பேணி வைதீக மரபின் வண்ணம் அக்கினியிலும், ஆகம மரபின் வண்ணம் விக்கிரகத்திலும், தாந்திரிக மரபின் வண்ணம் ஸ்ரீ சக்ரத்திலும் ஆவாஹித்து வழிபடுவர்.

ஸ்ரீ சக்ரத்தில் சிவசக்தி ஐக்கிய சொரூபியாக இருக்கும் திரிபுர சுந்தரியை உபாசிக்கும் மரபே ஸ்ரீவித்யையாகும். ஸ்ரீவித்யையின் முக்கிய இடத்தை ஸ்ரீசக்ர உபாசனை பெறுகிறது என்பர். ஸ்ரீவித்தை எனும் தெய்வக்கலை ரகசியத்தை அறிந்திருப்பவர்கள் " பாக்கியசாலிகள்" என்று சொல்கின்ற. ஸ்ரீசக்ரத்தின் மூல ஆதார நூல்கள். குருமூலமாக உபதேசம் பெற்று ஸ்ரீசக்ர பூஜையை செய்பவர்கள் இந்த உலகத்தில் மகாபாக்கி யங்களைப் பெற முடியும் என்கிறது ஸ்ரீவித்யா ரகஸ்யம்.

இவ்வழிபாடு தொடர்ச்சியாக செய்ய வேண்டியது. விதிமுறை வழுவாது செய்யப்பட வேண்டியது. மனச்சலனம் இல்லாதவராக இருக்க வேண்டும். இவ்வழிபாட்டினால் யோகமும் குருபலனும் கிடைத்து பரமரகஸ்யங்களை அறிந்து தேவியின் விஸ்வரூபக் காட்சியை பெறுவார் என்று குறிப்பிடுவர். "சிவஞானப் பிரதாயினி" என்பது அம்பாளின் திருநாமங்களுள் ஒன்று. சிவஞானப் பேற்றை தந்து முத்தியருளும் சிறப்புடையவள் அவளேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சென்னியதுன் பொற்றிருவடித்தாமரை சிந்தையுள்ளே
மன்னியதுன் திருமந்திரம் சிந்துர வண்ணப் பெண்ணே!
முன்னிய நின்னடியாருடன் கூடி முறை முறையே
பன்னிய தென்று முன்றன் பரமாகம பத்ததியே”

சிரசில் தேவியின் திருவருளும், மனதில் அவள் உதக்ருஷ்டமான மந்திரமும், செயலில் அவளது ஆகமங்களில் விதிக்கப்பட்டுள்ள பூஜா விதானமும் என்று அம்பிகையை நேரிலே கண்ட அபிராமிப்பட்டர் பாடுகின்றார்.

முற்பிறப்பின் தவப்பயனாலேயே அம்பிகையின் அருள் ஸாதகனுக்கு ஏற்பட முடியும். அப்படி ஏற்படாதவர்கள் அடுத்து வரும் பிறவிகளிலாவது ஒரு நல்ல நிலையை அடைய இப்பிறவியிலேயே அம்பிகையை இறுகப்பிடித்துக் கொள்ள வேண்டும்.

அதற்காக நம்முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்திருப்பவைகளே ஜபம், தபம், பூஜைமுறை, நாம சங்கீர்த்தனம் என்பவைகளாகும்.

த்வைத பாவனையிலிருக்கும் சாதகனை அத்வைத நிலைக்கு கொண்டு வருவதே இப்பூஜையினால் ஏற்படக்கூடிய பலனாகும். எங்கோ இருக்கின்றாள் என்பவளை தன் ஹிருதயத்திற்குள் கண்டு அந்த சக்தியை வெளிக்கொணர்ந்து பூஜை செய்யும் யந்திரத்திலே ஆவிர்பவிக்கச் செய்து அவளை பூஜித்து பின் இருதய கமலத்திலே கொண்டு போய் அமர்த்துவதே இந்த பூஜையின் உள்ளார்ந்த ரகஸ்யமாகும்.

இவ்வகையில் பக்தியோடு செய்யுமிடத்து ஆன்மாக்களின் இறுதி லட்சியமாகிய சிவனுடன் ஐக்கியமாகி ஸ்ரீசக்ரத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கும் மனித ஆத்மாவுக்கும் ஐக்கியம் ஏற்படும். இந்த லட்சியத்தை அடைந்த பிறகு வேறு இலட்சியம் இல்லாமல் போகிறது.

இத்தகைய சிறப்பும் பெருமையும் பொருந்திய இவ்வழிபாட்டு முறையை உள்ளன்போடும், பயபக்தியுடனும் சிறப்புற ஆற்றி துன்பமற்ற பேரானந்த நிலையாகிய சிவசக்தி ஐக்கிய நிலையடைந்த ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக இந்நூல் வெளிவருகிறது.

24.08.2015 குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி

நாம் இப்பூவுலகில் வாழ்கின்றோம். இப்பூவுலகமான பூமி இறைவனால் ஆக்கப்பட்டது. பஞ்ச பூதங்கள் எனும் சக்திகளின் ஆளுமைக்கு உட்பட்டதாக இப்பூமி அமைந்துள்ளது. இதில் புல், பூண்டு, மரம், செடி, கொடி, புழு, பாம்பு, எறும்பு முதலான ஊர்வனவும் சிங்கம், புலி, கரடி, யானை முதலான மிருகங்களும் மனிதர்களாகிய நாமும் வாழ்ந்து வருகின்றோம். நாம் வாழும் இந்தப் பூமியை "பூமாதேவி என்று அழைப்பர்.

நாம் வணங்கும் தெய்வங்கள் எம்மைப்போல ஆண், பெண் என இருவகையினவாகும். மரங்களிலே கூட ஆண்மரம், பெண் மரம் என்று உள்ளது. பெண் எனக் கூறுமிடத்து பெண்மை முதலிடத்தை வகிக்கின்றது. "அம்மையே அப்பா" எனப் போற்றிப் பாடிய வகையில் அன்னை முதலிடத்தை வகிப்பதை நோக்கலாம். அந்த அன்னையை "அம்மா" என அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மையையும் அப்பனையும் திருமுறைகள் விதந்துரைக்கின்றன சீர்காழியில் சிவபாதவிருதயர், தனது மகனிடம் " உனக்கு யார் பால் தந்தது?" என வினவுகின்றார்.

" தோடுடைய செவியன்" என குழந்தையான ஞானசம்பந்தர் விடை பகர்கின்றார். தந்தை கேட்ட மாத்திரத்தே, உலக மாதாவாகிய உமாதேவியாரின் "தோடே அவருக்கு முதலில் தென்பட்டது. பெண்மைக்கு உரித்தான அணிகலனான " தோடு" முதலிடத்தை வகிப்பதை நாம் இங்கு நோக்கலாம். ஞானசம்பந்தப் பெருமானின் "தோடுடைய செவியன்" என்ற தேவாரமே திருமுறைகளில் முதலாவதாக அமைவதை நாம் காண முடியும்.

நாம் அன்பாகவும் அவதியுற்று அல்லல் படும் வேளையிலும் "அம்மா" என அழைக்கின்றோம். வயிற்றுவலி, நோ போன்ற வருத்தங்கள் ஏற்படுகின்ற நேரங்களிலும் கூட அம்மா என்றே அழைக்கின்றோம்.

ஒரு குழந்தை பிறந்தவுடன் மூடிய வாயைத் திறக்கின்ற போது "அ" என்றே அழுகின்றது. பின்னர் அக்குழந்தை வாயை மூடும் போதும் "ம்" என்கிறது. மீண்டும் வாயைத் திறக்கும் போது "அ" என அழுகின்றது. இங்கே குழந்தை பிறந்தவுடனே தன்னை அறியாமலும் எமக்கு தெரியாமலும் "அம்மா" என அழைப்பதை நாம் காண முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே அன்புடனே ஆதரிக்கும் தெய்வம் நீயே" எனப் பாடும் போதும் அம்மாவே போற்றப்படுகின்றாள்.

பாமர மக்கள் முதல் எல்லா மக்களும் அம்பாளின் வழிபாட்டை முறையாக பண்டுதொட்டு செய்து வருகின்றனர். இந்த வழிபாட்டில் அம்பாளின் திருவுருவம் பல வடிவங்களில் பூஜிக்கப்பட்டாலும் அம்பிகை வழிபாடு அன்றும் இன்றும் பேரருள் மிக்க வழிபாடாக அமைந்துள்ளது.

அம்பிகை வழிபாட்டில் திருவுருவ வழிபாடும், அவளின் ஸ்ரீச்சக்கர வழிபாடும் உள்ளன. " ஓம்" என்ற நாத ஒலியில் முழு உலகமும் ஈர்க்கப்பட்டு மந்திரங்களை உச்சரிக்கும் போது "ஓம்" என்றே உச்சரிக்கப்படுவதை நாம் காணலாம். ஓம் என்னும் ஒலியில் "ம" வுக்கு மேலே உள்ள வட்டம் "பிந்து ஆகும். அந்த பிந்துவை ஒத்ததே ஸ்ரீசக்கரத்தின் நடுமையமான பிந்துவாகும்.

அம்பாளை ஆதரித்து வழிபடுபவர்கள் ஸ்ரீசக்கரபூஜை செய்து வழிபடுவது வழக்கத்தில் உள்ளது. எம்மோடு வாழ்ந்து வந்த பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்கள், முன்னேஸ்வர தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ கா.இரத்தினகைலாசநாதக் குருக்கள் ஆகியோர் தமது குலதெய்வ வழிபாடாக ஸ்ரீசக்ர பூஜையை செய்து வந்தனர். காலகதியில் இவர்களின் தலைசிறந்த மாணவனும் நல்லூர் கமலாம்பிகை சமேத கைலாசநாத சுவாமி தேவஸ்தான பிரதம குருவும் நிர்வாகியும் யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருத துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதவானும் நியந்ரீ அமைப்பின் செயலாளருமான பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா அவர்கள், குரு உபதேசத்திற்கு அமைய தமது வாழ்நாள் முழுவதும் ஸ்ரீசக்ர பூஜை செய்து வந்தார். ஸ்ரீசக்ர பூஜையை பாராயணம் செய்தும் வந்தார்.

அம்பாள் வழிபாடு, ஸ்ரீசக்ர பூஜை ஆகியன அடியார்கள் மத்தியில் தற்போது மிகவும் பிரபல்யம் மிக்கவை. அடியார்களுக்கு இவை தொடர்பான விளங்கங்களைக் கொடுத்தால் அவை அவர்களுக்கு பயனுறுவதாக அமையும். அந்நோக்கில் வந்ததே இச் சிறு நூலாகும்.

இப்பூவுலகில் சக்தி வழிபாடு, அம்பாள் வழிபாடு மிகவும் பிரபல்யம் ஆனதாகவும் அருட்சக்தி கொண்டதாகவும் இன்றும் எம்மிடையே இயங்கி வருவது அம்பாளின் திருவருளினாலேயேயாம். "அம்மா.... ஆதிபரா சக்தியே எமக்கு அருள்வாய் தாயே" என அம்பாளை பூஜித்து வழிபடுவோம்.

பிரம்மஸ்ரீ சோ.குஹானந்தசர்மா

**136/28**
ஜோர்ச் ஆர்.டி. சில்வா மாவத்தை,
கொழும்பு - 13
0112330459



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகை... ஒரு விளக்கம்

### அம்பிகையின் சிறப்புக்கள் பற்றி நூல்கள் எவ்வாறு விளக்குகின்றன?

**1. வேதங்களில் இடம்பெறும் தேவிசூக்தம், ஸ்ரீசூக்தம்,துர்க்கா சூக்தம் போன்றவை அம்பிகையின் சிறப்பினை கூறுவன.**

**தேவிசூக்தம்:-**

நான் உலகை ஆள்பவள், செல்வத்தைக் கூட்டி வைப்பவள், பிரம்மத்தை ஸாஷாத்கரித்தவள், பூஜைக்குரியவர்களுள் முதன்மையானவள், எங்கும் நிறைந்து நிற்பவளும், பல வடிவில் எல்லா ஜீவராசிகளிலும் புகுந்துறைபவளுமான அப்படிப்பட்ட என்னையே தேவர்கள் பலவிடங்களிலும் (செய்யும் செயல்களால்) வழிபடுகின்றனர்.

**ஸ்ரீசூக்தம்:-**

அக்னி தேவனே! பொன்போன்ற காந்தியுடையவளும் பாவங்களை போக்குபவளும் பொன்னாலும் வெள்ளி யாலுமான ஹாரங்களை அணிந்தவளும் சந்திர பிம்பம் போன்றவளும் பொன்மயமானவளுமாகிய ஸ்ரீதேவியை எனக்கருள் புரியுமாறு எழுந்தருளச் செய்வீர்.

**துர்க்கா சூக்தம்**

செந்தீ வண்ணத்தினளும் தனது ஒளியால் (பகைவர்களை) எரிப்பவளும் ஞானக்கண்ணால் காணப்பட்டவளும் கரும பலனை கூட்டிவைப்பவளுமான துர்க்காதேவியை நான் சரணடைகிறேன். பிறவிக் கடலை எளிதில் கடத்துவிப்பவளே! கடத்துவிக்கும் உனக்கு நமஸ்காரம்.

**2. தேவி உபநிஷதங்களில் ஒன்றான த்ரிபுரோபநிஷத்தில்**

(இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்ற) மூன்று கோடுகள் எவையோ, (கண், கழுத்து, இருதயம் ஸஹஸ்ராரமாகின்ற) வீடுகள் எவையோ,(பூ:புவ:ஸ்வ: என்ற) மூன்று லோகங்கள் எவையோ, (ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற) முக்குணங்கள் எவையோ மூன்று வடிவான இவையெல்லாம் பாராசக்தியே. ஆவரணங்களை நிரப்பும் சக்தி அதுவே. மந்த்ரமே வடிவான ஸ்ரீசக்ரத்தில் மத்திய த்ரிகோண ரூபிணியான (மதன்யா) சிச்சக்தியுடன் பிந்து ரூபியான மதன காமேச்வரர் விளங்கு கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக் கிரியைகளின் போது ஆசீர்வாதம் பெறல்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. அம்பிகை பற்றி நான்மறைகள் என்ன சொல்கின்றன?

**ருக்வேதம்**

எவள் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கிறாளோ எவள் எல்லாவற்றிலும் வெளிப்படுகிறாளோ, எவள் எல்லாவற்றையும் பிரகாசப்படுத்துகிறாளோ அவளே பரம்பொருள் ஆதிசக்தி என்கிறது.

**யஜுர் வேதம்:-**

எந்த ஈஸ்வரி அனைத்து யக்ஞங்கள், யோகங்கள் ஆகியவற்றின் வழிபடு பொருளாக இருந்து கொண்டு வேதமாதாவாக உள்ளவளோ அந்த பகவதி மட்டுமே பரபிரம்மம் என்கிறது.

**சாமவேதம்:-**

எவள் இந்த பிரமாண்டத்தை அசையச்செய்கின்றாளோ, எவள் யோகினிகளின் தியான மூர்த்தமாக இருப்பவளோ, எவள் தனது பிரகாசத்தினால் இந்த அண்டத்தை வெளிப்படச் செய்கிறாளோ அந்த துர்க்கை மட்டுமே பரம்பொருள்.

**அதர்வண வேதம்:-**

தேவர்களின் ஈஸ்வரியாக இருந்து எவள் அவர்களின் நன்மையைச் செய்கின்றாளோ அந்த பகவதி துர்க்கையை சாஸ்திரங்கள் பரம்பொருள் என்று கூறுகின்றன. என இவ் வேதம் கூறுகின்றது.

எனவே வேதங்கள் நான்கும் அம்பிகையே மூலப்பரம் பொருள் என்று தெளிவாக கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. அம்பிகை உபாசனையின் பயன்**

அம்பிகை லோகமாதா. கருணை காட்டுபவள். நான்குவித புருடாத்தங் களையும் அவள் கொடுக்கக்கூடியவள். மற்றத் தெய்வங்கள் எல்லாம் இவளிடமிருந்து சக்தி பெற்று நமக்கு அருள் செய்கின்றனர்.

சகலவிதமான பாவங்களுக்கும் அம்பிகையினுடைய பாதஸ்மர ணமே பிரயாச்சித்தம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

"க்ருதஸ்யாகில பரபஸ்ய ஞானதோக்ஞான தோபிவா
பிராயச்சித்தம் பரம் ப்ரோக்தம் பராசக்தி : பதஸ்மிருதி:

அம்பிகையை நீயே கதி என்று சரணடைந்து விட்டவனுக்கு, கன்றை விட்டுப் பிரியாமல் தொடர்ந்து போகும் பசு மாதிரி வாத்ஸல்யத்துடன் அவள் ரக்சிப்பதாக கூறப்பட்டுள்ளது.

"வாத்ஸல்ய ஸஹிதா தேனு: யதாவத்ஸ மனுவ்ரஜேத்
ததானுகச்சேத் ஸா தேவி ஸ்வபக்தம் சரணாகதம்:

நான்குவித புருஷார்த்தங்களையும் இப்பிறப்பிலேயே கொடுப்பவள் அம்பிகை.

எனவே நாம் எவ்வளவு பாபம் செய்தவர்களானாலும் அம்பிகையை சரணடைந்தால் போதும் அவள் அருள்புரிவாள்.

**4. அம்பிகை உபாசனையில் முக்கிய அங்கங்களாக விளங்குபவை எவை?**

**ஸ்ரீ சக்கர பூஜை, ஸ்ரீவித்யா ஜபம், சகஸ்ரநாம கீர்த்தனம்.**

" சக்ர ராஜார்ச்சநம் தேவ்யா:
ஜபோ நாம் நாம் ச கீர்த்தனம்.
" அம்பிகைக்கு மகா யாக க்ரமாராத்யா" என்று ஒரு நாமம்:

**5. ஸ்ரீ வித்யா உபாஸனைக்கு எத்தனை அங்கங்கள் உண்டு? அவை எவை?**

**1. மந்த்ரம் 2. சக்ரம் 3. பூஜை**

மந்திரங்களுக்கு விசேஷசக்தியுண்டு. பெருமையும் மகிமையும் கொண்டவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசக்ரம் என்பது ஒன்பது ஆவரணங்களோடு கூடியது. இதனையே அபிராமிப்பட்டர் "ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும்" என்றும் கூறுகின்றார்.

பூஜா என்பது ஆகமங்களில் கூறிய முறைப்படி செய்வது.
இப்பூஜையை

1. பரா 2. அபரா 3. பராபரா

என மூன்று விதமாக முன்னோர் பிரித்து வைத்துள்ளனர்.
பரா பூஜை என்பது தாம் செய்வதெல்லாம் ப்ரஹ்மார்ப்பணம் என்பதாகும்.

அபரா பூஜை செய்வதற்கு - பூஜா திரவியங்கள், வழிபடுவதற்கு ஒரு மூர்த்தம் அதாவது ஸ்ரீசக்ரம், விக்ரஹம், ஏதேனும் ஒன்று வேண்டும். அபிஷேக அலங்காராதிகள் செய்து வழிபட வேண்டும். மந்திர உபதேசம் அவசியமில்லை.

பராபரா பூஜை - மந்திர உபதேசமும் குருவினது பேரருளும் பெற்றவர்கள் மட்டுமே செய்ய முடியும்.

**6. சனாதனதர்மமான இந்துமதத்தின் சாக்த பிரிவு, உலக அன்னை யின் திருவுருவத்தை எத்தனை நிலையாக வகைப்படுத்துகிறது?**

மூன்று வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
1. ஸ்தூல வடிவம்
2. சூட்சும வடிவம்
3. காரணவடிவம்

ஸ்தூல வடிவம் என்பது -

பாசம், அங்குசம், கரும்புவில், மலர், அம்பு ஆகிய வற்றைக் கொண்டு, இடது பாதத்தை ஊன்றியும், வலது காலை மடித்தும் அமர்ந்திருக்கும் திருக்கோலமாகும்.

காரண வடிவம் என்பது -

ஸ்ரீ அன்னையின் மூல மந்திர ஒலி வடிவமாகும்.

சூட்சும வடிவம் என்பது -

**புகழ்பெற்ற ஸ்ரீ யந்திரம் என்ற ஸ்ரீ சக்கர வடிவமாகும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சக்கரம்

**7. ஸ்ரீ சக்கர வடிவைப்பற்றிய விபரங்களை தரும் நூல் யாது?**

மோஹினி ஹிருதயம்.
இந்நூலை வாமகேஷ்வர தந்திரம் என்றும் அழைக்கிறார்கள்.

**8. ஸ்ரீசக்கரம் எதனை விளக்குகிறது?**

ஸ்ரீசக்கரம் என்பது எல்லையில்லாத பிரபஞ்சத்தைக் குறிப்பதாகும். அண்டவெளிக்கு துவக்கமும் கிடையாது. முடிவும் கிடையாது. அப்படிப்பட்ட அண்டத்தின் ரகசியத்தை மனித அறிவால் எக்காலத்திலும் முழுமையாக அறிந்துகொள்ள முடியாது. எனவே அக்கால ரிஷிகளும் முனிவர்களும் முயற்சித்துக் கண்டறிந்த மெய்ஞான ரகசிய வடிவமே ஸ்ரீசக்ரமாகும்.

ஸ்ரீ சக்ரம் அவருடைய இல்லம். ஸ்ரீசக்ரம் நான்கு மேல் நோக்கிய கோணங்கள். இவை சிவசக்ரங்கள் எனப்படும். கீழ்நோக்கிய ஐந்து சக்கரங்கள் சக்தி சக்கரங்கள் எனப்படும். இந்த ஒன்பது முக்கோணங்களும் இடைவெட்டி மொத்தம் 44 முக்கோணங்கள் உண்டாக்கும். இது நடுவில் உள்ள பிந்து சக்ரத்தையும், சேர்த்த பகுதியினையும் சேர்த்த எண்ணிக்கையாகும்.

ஒன்பது முக்கோணங்களில் எட்டினை மட்டும் கணக்கெடுத்தால் மிகுதி உள்ள ஒரு முக்கோணம் நிலையானதாக அசைவற்று இருக்கும். நிலைப்பண்பு என்பது சிவத்தினுடைய தன்மை. இயக்கம் என்பது சக்தியினுடைய தன்மை. இந்த சக்ரங்கள் சக்தியின் இயக்கத்தால் லலிதையின் இல்லமாக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீசக்ரம் பிரபஞ்ச சக்ரம் எனவும் கூறப்படுகிறது. ஸ்ரீசக்ரத்திற்கும் குண்டலி பயணிக்கும் ஒன்பது சக்ரங்களையும் ஒப்பிட முடியும்.

ஸ்ரீ சக்ரம் மனித உடலுடனும் ஒப்பிட முடியும். மேல் சக்ரங்கள் நாபிக்கு மேல் உள்ள பகுதிகளையும், கீழ்சக்ரங்கள் நாபிக்கு கீழ் உள்ள பகுதிகளையும் குறிப்பிடும்.

பிந்து என்பது உள்ளே காணப்படும் கீழ் நோக்கிய புள்ளியாகும். **இந்த பிந்துவே உலகத்தோற்றத்திற்கெல்லாம் காரணமாகக் கருதப்படுகிறது.** இந்த பிந்துவை சூழ உள்ள பகுதி ஆனந்தத்தைத் தருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே "சர்வானந்தமயச் சக்ரம்" எனப்படுகிறது. இந்த ஆனந்தத்திற்கு காரணம் சிவனும் சக்தியும் இந்தச் சக்கரத்தில் இணைந்து உள்ளார்கள்.

ஸ்ரீசக்ரமும் மகாமேருவும் ஒன்றே. மஹா என்றால் பெரிய என்றும், மேரு என்றால் மலை என்றும் பொருள்படும். தேவி, மகாமேருவின் உச்சியில் வசிக்கின்றாள். ஸ்ரீசக்ரத்தின் முப்பரிமாண வடிவமே ஸ்ரீசக்ரம் எனப்படும். ஸ்ரீ சக்ரம் என்பது தட்டையான வடிவம். பிந்து என்பது புள்ளியாகக் குறிக்கப்படும்.ம மஹாமேருவில் பிந்து உச்சியில் காணப்படும்.

அபிராமியந்தாதியின் அபிராமிப்பட்டர் "ஒளி நின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே" என்று அம்மையின் இருப்பிடமாக ஸ்ரீசக்ரம் விளங்குவதை கூறுகின்றார்.

சக்கரங்களுக்கெல்லாம் சிரேஷ்டமானது ஸ்ரீசக்ரம்
அது தேவியின் திருவருட் சக்ரம்.

சரீரமானது ஜீவனுக்கு எப்படி நிலைக்களனாக உள்ளதோ அவ்வாறே சிவன் சக்தி இருவருக்கும் இருப்பிடமாக உள்ளது ஸ்ரீசக்ரம். ஸ்ரீ என்றால் பெருமை வாய்ந்த சிறப்பு மிகுந்த சக்ரம் என்று பெயர். இதில் ஆண்தன்மை 32-ம் பெண்தன்மை 32-ம் ஒன்றோடொன்று சேர்த்து இணைந்து செயல்படும் போது 43 முக்கோணமும் பிந்து வெளியில் தெரிகிறது. மற்ற கோணங்கள் உள்ளே மறைந்து விடுகிறது. இதன் காரணமாகவே 43 முக்கோண நடுவில் வீற்றிருக்கும் நாயகியே என்ற பாடல் உள்ளது.

**9. எல்லா யந்திரங்களுக்கும் மூலமந்திரமாக விளங்குவது எது?**
**ஸ்ரீசக்ரம்**

**10. மகாமேரு எனப்படுவது யாது?**
முதல் இறை உருவமான ஸ்ரீபரப்பிரம்மத்தின் தத்துவ வரைபடமாகிய **ஸ்ரீசக்ரத்தின் முழு உருவமே ஸ்ரீமகாமேரு எனப்படும்.**

**11. ஸ்ரீசக்கரம் என்னும் ஸ்ரீமகாமேருவின் சிறப்பு என்ன?**
இறைவழிபாட்டில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து வழிபாடு செய்யும் வகையில் ஆண் உருவமும் பெண் உருவமும் இணைந்த உருவமாக விளங்குவது இதன் சிறப்பம்சமாகும்.

மகா என்றால் பெரிய என்றும் மேரு என்றால் மலை என்றும் பொருள்படுவதனால் பெரியமலை என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசக்ரத்தை உயரமாகவும் உருவமாகவும் செய்தால் ஸ்ரீமகாமேரு எனப்படும். இதுவே பூரண மேரு எனப்படும். இவற்றை மேலிருந்து பார்த்தால் ஸ்ரீசக்ரத்தின் வடிவம் தெரியும்.

**அகலம், நீளம் ஒரே அளவில் அமைந்தும், சக்திகோணம் சிவகோணம் இரண்டும் ஒன்று சேர்ந்து தட்டையாக (தகட்டில்) அமைந்துள்ள உருவம் ஸ்ரீசக்கரம் ஆகும்.** அகலம், நீளம், உயரம் அனைத்தும் முழு அளவில் சக்திகோணம், சிவகோணம் இரண்டும் ஒன்று சேர்ந்து அமைந்துள்ள உருவம் ஸ்ரீமகாமேரு எனப்படும்.

**12. ஸ்ரீசக்ரம் - மஹா மேரு சக்ரம் ஆகியனவற்றை எமக்கு எது எடுத்துக்காட்டுகின்றன?**

ஸ்ரீசக்ர பதக்கம், ஸ்ரீசக்ரம் பொறித்த காசுமாலை, ஸ்ரீசக்ர ரதம் (சென்னை ஸ்ரீ காளிகாம்பாள் கோவில்)

மாமல்லபுரம் கடற்கரை கோயில் இரட்டை கோபுரம், மேரு அமைப்பில் உள்ளது.
வடமாநிலங்கள் உள்ள பெரும்பாலான ஆலய கோபுரங்கள் மேரு அமைப்பில் உள்ளன.
மற்றும் எல்லா ஆலய கோபுரங்களும் மேரு தத்துவத்தை வலியுறுத்தியே கட்டப்படுகிறது.

இறைவன் ஆயுதங்களில் ஒன்றுக்கு சக்ராயுதம் என்றும், சக்கரம் உடைய இறைவனுக்கு சக்ரதாரி என்றும் பெயர். ஆழ்வார்களில் ஒருவருக்கு சக்கரத்தாழ்வார் என்றும் பெயர்.

**13. ஸ்ரீ மகாமேரு சக்ர உருவத்திற்கு ஸ்ரீ பிரம்ம காயத்திரி மந்திரம் வலியுறுத்தப்படுவதன் காரணம் யாது?**

ஆண் பெண் ஒன்று சேர்ந்து அலி தன்மையில் அமைந்துள்ள ஸ்ரீ பரப்பிரம்மம் இரண்டு தன்மைகளாகப் பிரிந்து, ஒன்று ஆண் கர்மா (உருவமாக) ஸ்ரீமகாமேரு சக்ரம் என அமைந்தும், மற்றொன்று பெண் கர்மிணி (அருவமாக) ஸ்ரீ காயத்ரி மந்திரம் என அமைந்தன. இதன் காரணமாகத்தான் ஸ்ரீமகாமேரு சக்ரத்திற்கு மந்திர சாதனம் என்றும், ஸ்ரீ பரப்பிரம்ம சக்ரம் என்றும் பெயர்படுகிறது. இதன் தொடர்பாகத்தான் ஸ்ரீ மகாமேரு உருவத்திற்கு ஸ்ரீ பிரம்ம காயத்ரி மந்திரம் வலியுறுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி ஸ்ரீமகாமேரு அல்லது ஸ்ரீசக்ர உருவங்களை வைத்து ஸ்ரீ காயத்ரி மந்திரங்களை ஜெபித்து பூஜை செய்வதனால் ஆண்கள் பெண் தன்மை பெற்று, பெண்கள் ஆண் தன்மை பெற்று ஸ்ரீபரப்பிரம்மத்தின் (பிரம்ம நிலை) அருளைப் பெற்று சகல நன்மைகளையும் அடைய வழியேற்படும் எனக் கூறப்படுகின்றது.

**14. ஸ்ரீ சக்ரராஜத்தின் அடிப்படைத் தத்துவம் யாது?**

**ஸ்ரீ சக்ர ராஜத்தில் பிந்து பீடத்தில் ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியாகிய அம்பிகை வீற்றிருக்கிறாள். இது "பிந்துஸ்தானம்"** என்று அழைக்கப்படுகிறது. இந்த பிந்து ஸ்தானத்தையும் சேர்த்து ஒன்பது சக்ரங்கள் இருக்கின்றன. இதனை **ஆவரணங்கள்** என்றும் கூறுவர். ஆவரணம் என்பது ஆவ்விருத்தி என்பதன் கூட்டுப் பொருள் என்பதாம். ஆவ்விருத்தி என்பதற்கு மறைப்பு என்றும் அப்பியாசம் என்றும் பொருள் கொள்ளலாம். மனத்தில் உள்ள வேண்டாத உலக ரீதியான எண்ணங்களை அப்பியாசம் மூலம் நீங்கச் செய்வதையே ஆவரணம் என்பர்.

இந்த ஆவரணங்களைச் சுற்றி பல கோட்டைகள் இருக்கின்றன. (25) இந்தக் கோட்டைகளிலும், ஆவரணங்களிலும் தேவியின் அம்சம் பொருந்திய தேவதைகள் இருக்கிறார்கள். இந்த தேவதைகளை முறைப்படி துதித்து அனுமதி பெற்ற பிறகுதான் பிந்து ஸ்தானத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியை அடைய முடியும்.
**இதுவே ஸ்ரீசக்ர ராஜத்தின் அடிப்படைத் தத்துவமாகும்.**

**15. ஸ்ரீ சக்கரத்தில் எத்தனை கோட்டைகள், எத்தனை சக்ரங்கள் இருக்கின்றன?**

25 கோட்டைகள்
09 சக்கரங்கள் (ஆவரணங்கள்)

**16. ஸ்ரீலலிதா பரமேஸ்வரி எத்தனையாவது சக்ரத்தில் உறைந்துள்ளாள்?**

9வது சக்கரத்தில் அதாவது **9வது சக்கரமாகிய பிந்துஸ்தானத்தில் உறைந்துள்ளாள்.**

**17. ஸ்ரீசக்ரத்தில் உள்ள ஒவ்வொரு சக்ரங்களினதும் பெயர்கள் என்ன?**

| | | |
|---|---|---|
| முதல் சக்ரம் | - | பூபுரம் |
| இரண்டாவது சக்ரம் | - | ஷோடசதள பத்மம் |
| மூன்றாவது சக்ரம் | - | அஷ்டதள பத்மம் |
| நான்காவது சக்ரம் | - | சதுர் தசாரம் |
| ஐந்தாவது சக்ரம் | - | பஹிர் தசாரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஆறாவது சக்ரம் | - | அந்தர் தசாரம் |
| ஏழாவது சக்ரம் | - | அஷ்ட கோணம் |
| எட்டாவது சக்ரம் | - | த்ரிகோணம் |
| ஒன்பதாவது சக்ரம் | - | பிந்து |

**18. ஸ்ரீ சக்கரத்திலுள்ள இருபத்தைந்து கோட்டைகளும் யாவை?**

1வது இரும்புக்கோட்டை
2 வது வெண்கலக்கோட்டை
3 வது தாமிரக்கோட்டை
4 வது ஈயக்கோட்டை
5 வது பித்தளைக்கோட்டை
6 வது பஞ்சலோக கோட்டை
7 வது வெள்ளிக்கோட்டை
8 வது தங்கக் கோட்டை
9 வது புஷ்பராகக் கோட்டை
10 வது பத்மராகக்கோட்டை
11 வது கோமேதகக் கோட்டை
12 வது வஜாரத்தினக்கோட்டை
13 வது வைடூரியக் கோட்டை
14 வது இந்திரநீலக்கோட்டை
15 வது முத்துக்கோட்டை
16 வது மரகதக்கோட்டை
17 வது பவளக்கோட்டை
18 வது நவரத்தினக்கோட்டை
19 வது நானாரத்தினக்கோட்டை
20 வது மனோமயக்கோட்டை
21 வது புத்திமய பிரகாரம்
22 வது அஹங்காரக் கோட்டை
23 வது சூரிய பிரகாரம்
24 வது சந்திரப்பிரகாரம்
25 வது சிருங்காரக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19. கோட்டைகளை எவ்வாறு விளக்கலாம்?**

1 வது இரும்புக்கோட்டை – 16000 மைல்கள் அகலமும் நீளமும் கொண்டது.

2வது வெண்கலக்கோட்டை– நீலநிறமேனியுடன் மஹாகாளர் தனது பத்தினியான பத்ர காளியுடன் வாசம் செய்கிறார்.

3வது தாமிரக்கோட்டை – வசந்த ருதுவின் நாதன் மதுஸ்ரீ, மாது ஸ்ரீ என்ற பத்தினிகளுடன் விளங்குகிறார்

4 வது ஈயக்கோட்டை – தாமிரக் கோட்டையை அடுத்து, உயரமுடைய சிகரங்களுடன் கூடிய வெண்மையான ஈயக்கோட்டை உள்ளது. இக் கோட்டைக்கும் தாமிரக் கோட்டைக்கும் நடுவில் "ஸந்தான வாடிகை" காணப்பட அங்கு சுக்கிர ஸ்ரீ, சுசிஸ்ரீ என்ற இரண்டு சக்திகளோடு கிரீஷ்ம ருதுநாதன் வாசம் செய்கிறார்.

5வது பித்தளைக்கோட்டை – வர்க்ஷருதுநாதன் நபஸ்ரீ, நபஸ்யஸ்ரீ என்ற சக்திகளோடு வசிக்கிறார்.

6வது பஞ்சலோக கோட்டை– சரத்ருது நாதன் உஷஸ்ரீ, ஊர்ஜஸ்ரீ என்ற நாயகிகளுடன் வசிக்கிறார்.

7வது வெள்ளிக்கோட்டை – ஹேமந்த ருதுநாதன் ஸஹஸ்ரீ, ஸஹஸ்யஸ்ரீ, என்ற இரண்டு மனைவிகளுடன் பரமேஸ்வரியை அர்ச்சித்துக் கொண்டிருக்கிறார்.

8வது தங்கக் கோட்டை – சிசிர ருதுநாதன் தபஸ்ரீ, தபஸ்யஸ்ரீ என்ற தேவியர்களுடன் பணிப் பெண்கள் புடைசூழ அமர்ந்திருக்கிறார்.

9 வது புஷ்பராகக் கோட்டை – சித்தர்கள், சதாசர்வகாலம் பரதேவதையின் மந்திரத்தை உச்சரித்த வண்ணம் உள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 வது பத்மராகக்கோட்டை - பக்தியுடன் கூடிய அன்பர்களான சாரணர்கள், எப்போதும் ஜகன்மாதாவை நினைத்து கொண்டிருக்கிறார்கள்.

11 வது கோமேதகக்கோட்டை - எப்போதும் தேவியின் சரண கமலத்தையே தியானம் செய்து கொண்டு வடுக தேவர்கள் (பிரம்மச்சாரி சிறுவர்கள்) மோகினி கணங்களுடண் வாசம் செய்கிறார்கள்.

12 வது வஜ்ஜிரத்தினக்கோட்டை - இந்திரனாலும் தேவர்களாலும் ஸ்தோத்திரம் செய்யப்பட்ட "வஜ்ரேசி என்ற தேவி சர்வ அலங்காரத்துடன் வாசம் செய்கிறாள்.

13 வது வைடூரியக்கோட்டை - காமேஸ்வரியை திடமாக உபாசிக்கும் அனந்தன், வாசுகி தக்ஷகன், கார்கோடன், சங்கன், குளிகன் பத்மன், மஹாபத்மன் என்ற எட்டு ஸர்ப்பங்களும், பலிசக்கர - வர்த்தி போன்ற அசுரர்களும் வாசம் செய்கிறார்கள்.

14 வது இந்திரநீலக்கோட்டை - தர்மநெறி தவறாத மனு, மந்தாரை, பகீரதன், கயன், ப்ருது, பரதன் முதலிய - சக்கரவர்த்திகள் தேவியை நமஸ் - கரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

15 வது முத்துக்கோட்டை - ததீசிமுனிவர் மற்றும் திக்குப்பாலகர்கள் அவரவர் இடங்களில் இருக்கிறார்கள்.

16 வது மரகதக்கோட்டை - இங்கு நேருக்கு நேராக சியாமளா தேவியின் மாளிகையும், சேனாநாயகி வராகி தேவியின் மாளிகையும் இருக்கிறது.

17 வது பவளக்கோட்டை - இங்கு பிரம்மதேவன் வாசம் செய்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 வது நவரத்தினக்கோட்டை – இங்கு வெண்பட்டு ஆடை அணிந்து, ஸ்ரீவஸ்த, கௌஸ்துபம் அணிந்து பீதாம் -பரதாரியாக மகாவிஷ்ணு கருடவாக னத்தில் வீற்றிருக்கிறார்.

19 வது நானாரத்தினக்கோட்டை -

புலித்தோலை ஆசனமாகக் கொண்டு சந்திரகலையை சிரசில் தரித்து ஸ்ர்வ அலங்காரத்துடன் நீலகண்டராகவும், ம்ருத்யுஞ்ஜயராகவும், ருத்ரதேவராகவும் ஆன ருத்திரன் பவானி தேவியுடன் வீராசனத்தில் அமர்ந்து நந்தி சிருங்கி ருத்திரகணங்கள் சூழ்ந்து இருக்கிறார்கள்.

20 வது மனோமயகோட்டை -

இங்கு சஞ்சலத்தைப் போக்கும் தத்து வமாக "அமிர்தவாபிகை" எனும் இடம் உள்ளது. அங்கு தாராதேவி இருக்கிறாள்.

21 வது புத்திமய பிரகாரம் - இங்கு "அநந்த வாபிகை" எனும் இடத்தில் மாணிக்கத் தோணியில் கருணை பொங்கும் கண்களுடன் வாருணிதேவி பல்லாயிரம் தோழிகள் துடுப்புகளால் தோணியைச் செலுத்த ஆனந்தமாய் வீற்றிருக்கிறாள்.

22 வது அஹங்காரக்கோட்டை - இங்கு விமர்சவாபிகை எனும் இடத்தில் ரத்தினமயமான ஓரிடத்தில் கரும்பச்சை நிறமேனியுடன் சுந்தரவத னத்துடன் மீன் போன்ற கண்களுடன் கையில் வில்லை ஏந்தி பல்லாயிரம் அழகுமிக்க தோழிகள் பணிவிடை செய்ய குருகுல்லா தேவி இருக்கிறாள். (புத்தியைக் கொண்டு அஹங்காரத்தை நீக்கவேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தும் இடமாக உள்ளது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 வது சூரியபிரகாரம் - இக்கோட்டைக்கு இடையில் உள்ள மாணிக்க மண்டபத்தில் செம்மலர்களால் ஆன வாடாத மலர்மாலை அணிந்து மாணிக்க கிரீடம் தரித்து சக்ஷீக்ஷ்மதி, சாயாதேவி என்ற தேவிகளுடன் மார்த் தாண்ட பைரவர் (சூரியமூர்த்தி) நித்திய வாசம் செய்கிறார்.

24 வது சந்திரப்பிரகாரம் - சூரியசந்திர கோட்டையின் இடையில் மிகவும் குளிர்ச்சியானதும், காற்று வீசிக்கொண்டிருக்கும் சந்திரகோத்காரம் இருக்கிறது. அதில் நட்சத்திரக் கூட்டத் தினால் சூழப்பட்டு மிகவும் மனோகரமாக சந்திரன் விளங்குகிறான்.

25 வது சிருங்காரக் கோட்டை - சந்திர பிரகாரத்தை அடுத்து சுவர்ண ரத்தினங்களால் ஆக்கப்பட்ட சிகரங்களை யும் அழகுகோபுரங்களையும் உடைய "கிருங்கார பாரிகை" என்ற கோட்டை இருக்கிறது. அதன் கரையில் மணி மயமான உப்பரிகையில் சிருங்கார அழகு தேவிகளுடன் மன்மதன் வசிக்கிறார்.

இந்த சிருங்கார கோட்டைக்கு உள்ளே சித்தாமணிமய பிரகாரத்தில் தங்கநிற இலைகளுடனும், உயர்ந்த தூண் களுடனும், மிருதுவான இதழ்களுடனும் கூடிய தாமரைகள் நிறைந்தும், பலவகைப்பட்ட வாசனை நிறைந்த புஷ்பங்கள் நிறைந்த "மஹாபத்மாடவி" இருக்கிறது. இதன் மத்தியில் சிந்தாமணி கிருஹராஜம் இருக்கிறது. இச்சிந்தாமணி கிருஹராஜத்தின் அக்கினி மூலையில் மிகுந்த ஒளியோடு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கும் பரதேவதையின் தோற்ற இடமாக "சிதக்னிகுண்டம்" உள்ளது.

இந்த சிந்தாமணி கிருஹராஜத்தின் மத்தியில்: பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன் நான்கு கால்களாகவும் ஸ்தாசிவம் பலகையாகவும் விளங்கும் பஞ்சப்ரஹம மஹா சிம்மாசனத்தில் கறுப்பு பட்டுத்துணி திரைமறைக்கப்பட்டு **"ஸர்வாநந்தமய" பிந்துபீடம் இருக்கிறது.** அந்த பீடத்தின் **எட்டுச் சக்கரங்களுடன் கூடிய பிந்து பீடமே ஸ்ரீசக்ரம் என்று அழைக்கப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சக்ரராஜம் என்பது இந்த பிந்துபீடத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இந்த பிந்து பீடத்தைச் சுற்றியுள்ள 25 கோட்டைகளும் ஸ்ரீசக்ரத்தின் பெருமைகளையும் மகத்துவத்தையும் உணர்த்துவனவாக உள்ளன.

**20. உயிர்களின் இலட்சியமான ஸ்ரீசக்ர ராஜத்தை அடைவதற்கு ஸ்ரீ மந்திர ராஜம் எவ்வாறு துணைபுரிகிறது.**

சப்தங்கள் தான் மந்திரங்கள் எனப்படுகின்றன. சில **சப்தங்களுக்கு தெய்வீகசக்தி இருப்பதால் அதை "மந்திரம்"** என்று சொல்லப்படுகின்றது.

ஸ்ரீசக்கரத்தின் பிந்துஸ்தானத்தில் வீற்றிருக்கும் அன்னையானவள், ஏனைய சக்ரங்களிலுள்ள தனது அம்சம் கொண்ட தேவதைகளுக்கும் யோகினிகளுக்கும் தனித்தனியே மந்திரங்களை அருளியிருக்கின்றார். மனத்தைத் தூய்மைப்படுத்திக் கொண்டு இந்த தேவதைகளின் மந்திரங்களை முறைப்படி உச்சரித்து ஒவ்வொரு சக்ரத்தையும் கடக்கலாம்.
**குருவின் வழிகாட்டுதலின்படி பக்தியோடு இந்த மந்திரங்களை உச்சரித்துப் பூஜை செய்தால் லலிதா பரமேஸ்வரியின் தரிசனம் கிடைக்கும். அத்தோடு சிவனோடு ஐக்கியமாகி, ஸ்ரீ சக்கரத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கும் மனித ஆத்மாவுக்கும் ஐக்கியம் ஏற்படும்.**

இந்த ஐக்கியமே உயிர்களினது இலட்சியமும் ஆகும்.
ஸ்ரீசக்ர ராஜத்தை அடைய லலிதாபரமேஸ்வரி அருளியுள்ள சிறந்த வரப்பிரசாதமே **"ஸ்ரீ மந்திரராஜம்"** ஆகும்.

## 21. ஒன்பது சக்கரங்களுக்குமான மந்திரங்கள் யாவை?

**1வது சக்ரத்திற்கான மந்திரங்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. ஓம் | ஹ்ரீம் | அணிமா | ஸித்யை நம: |
| 2. ஓம் | ஹ்ரீம் | லகிமா | ஸித்யை நம: |
| 3. ஓம் | ஹ்ரீம் | கரிமா | ஸித்யை நம: |
| 4. ஓம் | ஹ்ரீம் | மஹிமா | ஸித்யை நம: |
| 5. ஓம் | ஹ்ரீம் | ஈசித்வ | ஸித்யை நம: |
| 6. ஓம் | ஹ்ரீம் | வசித்துவ | ஸித்யை நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. ஓம் ஹ்ரீம் ப்ரகாம்ய ஸித்யை நம:
8. ஓம் ஹ்ரீம் புத்தி ஸித்யை நம:
9. ஓம் ஹ்ரீம் இச்சா ஸித்யை நம:
10. ஓம் ஹ்ரீம் ஸர்வகாம ஸித்யை நம:

2 வது சக்கரமாகிய சோடச தள பத்மம்

1. ஓம் ஹ்ரீம் காமா கர்க்ஷினியை நம:
2. ஓம் ஹ்ரீம் புத்யா கர்க்ஷினியை நம:
3. ஓம் ஹ்ரீம் அகங்காரா கர்க்ஷினியை நம:
4. ஓம் ஹ்ரீம் சப்தா கர்க்ஷினியை நம:
5. ஓம் ஹ்ரீம் ஸ்பர்சா கர்க்ஷினியை நம:
6. ஓம் ஹ்ரீம் ரூபா கர்க்ஷினியை நம:
7. ஓம் ஹ்ரீம் ரஸா கர்க்ஷினியை நம:
8. ஓம் ஹ்ரீம் கந்தா கர்க்ஷினியை நம:
9. ஓம் ஹ்ரீம் சித்தா கர்க்ஷினியை நம:
10. ஓம் ஹ்ரீம் தைநர்யா கர்க்ஷினியை நம:
11. ஓம் ஹ்ரீம் ஸம்ருத்யா கர்க்ஷினியை நம:
12. ஓம் ஹ்ரீம் நாமா கர்க்ஷினியை நம:
13. ஓம் ஹ்ரீம் பீஜா கர்க்ஷினியை நம :
14. ஓம் ஹ்ரீம் ஆத்மா கர்க்ஷினியை நம :
15. ஓம் ஹ்ரீம் அம்ருதா கர்க்ஷினியை நம :
16. ஓம் ஹ்ரீம் சரீரா கர்க்ஷினியை நம :

3 வது சக்கரமாகிய அஷ்டதள பத்மம்

1. ஓம் ஹ்ரீம் அநங்க குஸுமாயை நம:
2. ஓம் ஹ்ரீம் அநங்க மேகலாயை நம:
3. ஓம் ஹ்ரீம் அநங்க மதனாயை நம:
4. ஓம் ஹ்ரீம் அநங்க மதனாதுராயை நம:
5. ஓம் ஹ்ரீம் அநங்க ரேகாயை நம:
6. ஓம் ஹ்ரீம் அநங்க அங்குசாயை நம:
7. ஓம் ஹ்ரீம் அநங்க வேகினீயை நம:
8. ஓம் ஹ்ரீம் அநங்க மாலினீயை நம:

4 வது சக்கரமாகிய சதுர்தச கோணம்

1. ஓம் ஹ்ரீம் ஸர்வ சம்க்ஷோபிணியை நம:
2. ஓம் ஹ்ரீம் ஸர்வ வித்ரா விண்யை நம:
3. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஆகர்க்ஷிண்யை நம:
4. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஹ்லாதிணீயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஓம் ஹ்ரீம் ஸர்வ சம்மோஹணீயை நம:
6. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஸ்தம்பனீயை நம:
7. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஜ்ரும்பிணியை நம:
8. ஓம் ஹ்ரீம் ஸர்வ வசங்கிரீயை நம:
9. ஓம் ஹ்ரீம் ஸர்வ ரஞ்சன்யை நம:
10. ஓம் ஹ்ரீம் ஸர்வோன் மாதிண்யை நம:
11. ஓம் ஹ்ரீம் ஸர்வார்த்த சாதிண்யை நம:
11. ஓம் ஹ்ரீம் ஸர்வ சர்வ சாதிண்யை நம:
12. ஓம் ஹ்ரீம் ஸர்வ சம்பத்தி பூரணீயை நம:
13. ஓம் ஹ்ரீம் ஸர்வ மந்த்ர மய்யை நம:
14. ஓம் ஹ்ரீம் ஸர்வ த்வந்த வசங்கர்யை நம:

**5 வது சக்கரமாகிய பஹிதார்த்த சாரம்**

1. ஓம் ஹ்ரீம் ஸர்வ சித்திப்ரதாயை நம:
2. ஓம் ஹ்ரீம் ஸர்வ சம்பத் பிரதாயை நம:
3. ஓம் ஹ்ரீம் ஸர்வ ப்ரியங்கிரியை நம:
4. ஓம் ஹ்ரீம் ஸர்வ மங்கள காரீணீயை நம:
5. ஓம் ஹ்ரீம் ஸர்வ காமப்ரதாயை நம:
6. ஓம் ஹ்ரீம் ஸர்வ துக்க விமோசினியை நம:
7. ஓம் ஹ்ரீம் ஸர்வ ம்ருத்யு ப்ரசமனீயை நம:
8. ஓம் ஹ்ரீம் ஸர்வ விக்ன நிவாசிணீயை நம:
9. ஓம் ஹ்ரீம் ஸர்வாங்க கந்தரியை நம:
10. ஓம் ஹ்ரீம் ஸர்வ சௌபாக்கிய தாயிணீயை நம:

**6 வது சக்கரமாகிய அந்தர்த்த சாரம்**

1. ஓம் ஹ்ரீம் ஸர்வ க்ஞாயை நம:
2. ஓம் ஹ்ரீம் ஸர்வ சக்த்யை நம:
3. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஐஸ்வர்ய ப்ரதாயை நம:
4. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஞானமயீயை நம:
5. ஓம் ஹ்ரீம் ஸர்வ வியாதி வினாசினீயை நம
6. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஆதாரரூபாயை நம:
7. ஓம் ஹ்ரீம் ஸர்வ பாபஹராயை நம:
8. ஓம் ஹ்ரீம் ஸர்வ ஆனந்த மய்யைநம:
9. ஓம் ஹ்ரீம் ஸர்வ ரக்ஷாஸ்வரூபினியை நம:
10. ஓம் ஹ்ரீம் ஸர்வேப்ஸித பலப்ரதாயை நம:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7 வது சக்கரமாகிய அஷ்ட திரிகோணம்

| | | | |
|---|---|---|---|
| 1. ஓம் | ஹ்ரீம் | வசினீயை | நம: |
| 2. ஓம் | ஹ்ரீம் | காமேஸ்வரியை | நம: |
| 3. ஓம் | ஹ்ரீம் | மோகின்யை | நம: |
| 4. ஓம் | ஹ்ரீம் | விமலாயை | நம: |
| 5. ஓம் | ஹ்ரீம் | அருணாயை | நம: |
| 6. ஓம் | ஹ்ரீம் | ஜயினீயை | நம: |
| 7. ஓம் | ஹ்ரீம் | ஸர்வேஸ்வரியை | நம: |
| 8. ஓம் | ஹ்ரீம் | கௌளின்யை | நம: |

8 வது சக்கரமாகிய த்ரிகோணம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. ஓம் | ஹ்ரீம் | மஹா | வஜ்ரேஸ்வரியை | நம: |
| 2. ஓம் | ஹ்ரீம் | மஹா | காமேஸ்வரியை | நம: |
| 3. ஓம் | ஹ்ரீம் | மஹா | மாலினீயை | நம: |

9 வது சக்கரமாகிய பிந்து. இதற்குரிய மந்திர தியான சுலோகம் –

"வீரான் த்வ்யஷ்ட சதுஷ்க
விஷ்டி நவகம் வீராவளீ
பஞ்சகம்
ஸ்ரீமன் மாலினி மந்த்ர
ராஜஸ ஹிதம் வந்தே
குரோர் மண்டலம்.

குருவின் வழிகாட்டுதலின்படி பக்தியோடு இந்த மந்திரங்களை உச்சரித்து பூஜை செய்தால் பிந்து சக்ரத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீலலிதா பரமேஸ்வரியின் தரிசனம் கிடைக்கும்.

**22. ஐம் க்லீ சௌ என்னும் மந்திரம் எதை உணர்த்துகிறது?**

**ஐம் என்பது - சரஸ்வதி**
**க்லீம் என்பது - காளி**
**சௌ என்பது - சௌபாக்கியம் தரும் லலிதாம்பிகை.**

சரஸ்வதியாக வந்து வார்த்தைகளை தருபவள்...!
காளியாக வந்து மாயையைக் கொடுத்து நீக்குபவள்...!
லலிதாம்பிகையாக வந்து லட்சியத்தை நிறைவேற்றுபவள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே இம் மந்திரத்தின் பொருளாகும்.

ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு மந்திரம்இருக்கிறது...!

நாம் எந்தத் தெய்வத்தை நம்பினாலும் அதற்குரிய மந்திரமாக அம்பாளே வருகிறாள். காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி, துர்க்கை, திரிபுரசுந்தரி என பல இஷ்ட தெய்வங்கள் இருக்கலாம். அந்தந்த பெயர்களுக்கும், வடிவங்களுக்கும் ஏற்றபடி லலிதாம்பிகை மந்திரங்களாக வருகிறாள். ஏனெனில் பல வடிவங்கள் தாங்கி பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்று பவள் லலிதா பரமேஸ்வரியேயாவாள்.

மும்மூர்த்திகளை படைத்து முத்தொழில்களை வழங்கியவளும் ஆதிசக்திதான். முக்கோடிதேவர்களும், அஷ்ட திக்கு பாலகர்களும், முனிவர்களும், சித்தர்களும் அவளுடைய மந்திரத்தையே உச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த மந்திர உச்சரிப்புத்தான் அவர்களுக்கு சக்தியை கொடுக்கிறது.

எனவே **மந்திர ராஜமாக இருப்பவள் லலிதாம்பிகையே.**
மந்திரமாகவே இருப்பவளும் அவளேயாம்.

ஒன்பது சக்கரங்களுக்குரிய மந்திரங்களோடு, பாலா லகு வித்யை மந்திரமான ஐம்.... க்லீம்... சௌ... என்கின்ற மந்திரத்தையும், பஞ்சதசீ மந்திர மான

"கஏஈ லஹ்ரீம் ஹஸ கஹல ஹ்ரீம்
ஸகல ஹ்ரீம்"

என்ற மந்திரத்தையும் எப்போதும் உச்சரித்துப் பழகும் போது ஸ்ரீமந்திர ராஜத்தை உபாயமாக அருளியுள்ள ஸ்ரீ லலிதா பரமேஸ்வரியானவள், ஸ்ரீ சக்ர வழிபாடு செய்து லட்சியத்தையடைய திருவருளையும் குருவருளையும் அவளே வழங்கி நிற்பாள்.

## 23. ஸ்ரீ சக்கர ராஜத்தை அடைவதற்கு ஸ்ரீ வித்யா ராஜம் எப்படி உபாயமாக உள்ளது?

ஸ்ரீ சக்ர ராஜத்தை அடைவதே ஒவ்வொரு உயிர்களினதும் இறுதி லட்சியமாகும். இவ் இலட்சியத்தை அடைய ஸ்ரீ மந்திரராஜம் உபாயமாக அமைந்தது. எனவே இம் மந்திரங்களைப் பயன்படுத்தி 25 கோட்டைகளையும் எப்படிக் கடக்க வேண்டும்? கோட்டைகளை கடந்த பிறகு எட்டு சக்ரங்களை எம் முறையை பயன்படுத்திகடக்க வேண்டும் என்பதை சொல்லித்தருவதற்கு குரு தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ சக்கர ராஜத்தில் மந்திரங்களின் துணையோடு தியானம், ஜபம், பூஜை போன்ற அனுஷ்டானங்களை எப்படிச் செய்ய வேண்டும்? என்ற வித்தைகளை அந்த அம்பிகையே தகுந்த குருவை அனுப்பி வழிகாட்டுகிறாள். இந்த அனுக்கிரகத்தையே "ஸ்ரீ வித்யா ராஜம்" எனச் சொல்லப்படும்.

**24. பிரஹ்மாண்டத்தை இயக்குவிக்கும் சக்தி, அகிலாண்ட கோடி பிரஹ்மாண்ட நாயகி என்று அழைக்கப்படுவதன் காரணம் யாது?**

பிண்டம், அண்டம், ஆகாச கோளம் ஒன்று சேர்ந்தது பிரம்மாண்டம் என்று அழைக்கப்படுகிறது.

சரீரத்தில் உள்ள தோல், ரத்தம், மூளை, தசைநார்கள், எலும்பு என்ற ஐந்தும் சக்தி மூலங்கள் ஆகும். ஜீவன், ப்ராணன், தேஜஸ், சுக்கிலம் ஆகிய நான்கும் சிவமூலம் ஆகும். இந்த ஒன்பதும் சேர்ந்த சரீரமே பிண்டம் என்று சாஸ்திரங்களில் விவரிக்கப்படுகிறது. அந்த சரீரத்தில் உள்ள பிராணன் பிரிந்ததும் பிண்டம் என்ற சரீரம் பிணம் என்றாகிறது.

நிலம், நீர், காற்று நெருப்பு ஆகாசம் ஆகிய ஐந்தும் பஞ்ச பூதங்கள் என்ற சக்தி மூலம். ஈஸ்வர தத்துவம் சதாசிவ தத்துவம், சுத்தவித்தை, மாயை என்ற நான்கும் சிவமூலம் ஆகும். இவ் ஒன்பதும் "அண்டம்" எனப்படும்.

ஆகாசத்தில் உள்ள சூரிய சந்திர நவக்கிரக மண்டலங்கள் ஒன்பதாக பிரிக்கப்பட்டு அவற்றை ஒன்றாக சேர்க்க, அது ஆகாசகோளம், அல்லது பூகோலம் என்று சொல்லப்படுகிறது. இந்த ஒன்பதும் **ஸ்ரீசக்ரத்தின் ஒன்பது ரேகைகளாகின்றன.**

எனவே **பிண்டம், அண்டம், ஆகாசகோளம்** ஆகிய மூன்றும் சேர்ந்த பிரஹ்மாண்டத்தை இயக்குவிக்கும் சக்தி **அகிலாண்ட கோடி பிரஹ்மாண்ட** நாயகி என அழைக்கப்படுகிறாள்.

**25. எமது சரீரத்தில் ஸ்ரீசக்ரம் எந்த முறையில் அமைந்து இருக்கிறது?**

| | | |
|---|---|---|
| 1. பிரம்ம மந்திரம் என்ற தலை உச்சி | பிந்து ஸ்தானம் | சிவமூலம் |
| 2. சிரசு (தலை) | திரிகோணம் (மூன்று கோணம்) | சக்தி மூலம் |
| 3. நெற்றி | அஷ்ட (எட்டு) கோணம் | சக்தி மூலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 4. புருவமத்தி | உள்பத்து கோணம் | சக்தி மூலம் |
| 5. கழுத்து | வெளிபத்து கோணம் | சக்தி மூலம் |
| 6. ஹ்ருதயம் (மார்பு) | பதினான்கு கோணம் | சக்தி மூலம் |
| 7. தொப்புள் | அக்ஷ்ட (எட்டு) தளபத்மம் | சிவ மூலம் |
| 8. இடுப்பு தொடைகள் | பதினாறு தளபத்மம் மூன்று வட்டங்கள் | சிவ மூலம் |
| 9. பாதம் | பூபுரம் | சிவ மூலம் |

இவ்வாறு சரீரத்தில் வெளிப்படையான அங்கங்களில் **ஸ்ரீ சக்ர பாவனை** சொல்லப்படுகிறது.

**26. சரீரத்தில் உள்ள ஆதாரங்களில் ஸ்ரீ சக்ரம் எவ்வாறு அமைகிறது?**

| | | |
|---|---|---|
| 1. மூலாதாரத்தின் கீழ் உள்ளபாகம் | பூபுரம் | சிவ மூலம் |
| 2. மூலாதாரத்திற்கும் பின்தொடைக்கும் இடைப்பட்டது (விஷ்) | பதினாறு இதழ் கமலம் | சிவ மூலம் |
| 3. மூலாதாரம் (தொப்புள்) | எட்டு இதழ்கமலம் | சிவ மூலம் |
| 4. ஸ்வாதிஷ்டானம் (இருதயம்) | பதினான்கு கோணம் | சக்தி மூலம் |
| 5. மணிபூரகம் (கழுத்து) | உள்பத்துகோணம் | சக்தி மூலம் |
| 6. அநாஹதம் (புருவமத்தி) | வெளிப்பத்து கோணம் | சக்தி மூலம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 7. விசுக்தி – நெற்றி | எட்டு கோணம் | சக்தி மூலம் |
| 8. இந்திர யோனி (உள்நாக்கு) | மத்திய முக்கோணம் | சக்திமூலம் |
| 9. ஆஞ்ஞை (தலையின் நடு) | பிந்து | சிவ மூலம் |

**27.மஹா த்ரிபுரசுந்தரீ எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நகரம் பற்றி சுருக்க மாகக் குறிப்பிடுக?**

ஸகலம் பிரம்மாண்டங்களுக்கும் அப்பால் அமிருதஸாகரத்தின் மத்தியில் இரத்தினத் துவீபத்தில் உள்ளது ஸ்ரீ நகரம். அதைச் சுற்றிப் பல கோட்டைகளும் பல உத்யான வனங்களும் உள்ளன. உத்யானங்கள் நானா வருக்ஷ மஹோத் யானம் கல்பவாடிகை, சந்தான வாடிகை, ஹரிசந்தன வாடிகை, மந்தார வாடிகை, பாரிஜாதவாடிகை, கதம்பவனவாடிகை என்பன.

கோட்டைகள் : இரும்பு, எஃகு, செம்பு, வெள்ளீயம், பித்தளை, பஞ்சலோகம், வெள்ளி, தங்கம், புஷ்பராகம், பத்ம ராகம், கோமேதகம், வஜ்ரம், வைடூரியம், இந்திரநீலம், முத்து, மரகதம், பவளம், நவரத்தினம், நானாரத்தினம் இவற்றாலும், மனம், புத்தி, அஹங்காரம் முதலிய தத்துவங்களாலும், சூரியன், சந்திரன், மன்மதன் இவர்களுடைய தேஜஸ்ஸாலும் அமைந்தவை. இதற்குள் மஹாபத்மாடவீ. அதன் நடுவில் சிந்தாமணிக்ருஹம். இதனுள் **நவாவரணங் களுடன் கூடிய ஸ்ரீ சக்ரம், ஸ்ரீ சக்ரத்தின் நடுவில் பஞ்சப் பிரம்மாஸனத்தின் மேல் மஹாசிம்ஹாஸனத்தில் ஸர்வானந்தமயம் எனும் பிந்து பீடத்தில் மஹாத்ரிபுரஸுந்தரி எழுந்தருளியிருக்கின்றாள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பிகைக்கு அருகிருந்து உபசாரம்...







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி சண்டிஹோமத்தில் ...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28. ஸ்ரீ சக்ர பூஜை முறையை விளக்குக.**

அம்பிகையை ஸ்ரீ சக்ரம் என்ற யந்திரத்தின் நடுவில் பிந்துவில் எழுந்தருளச் செய்து அவள் பரிவார தேவதைகளை அன்னையை நோக்கி அவளை சுற்றி ஒவ்வொரு கோணங்களில் எழுந்தருளியிருப்பதாக பாவித்து வழிபடுவதே ஸ்ரீ சக்ர பூஜையாகும்.

பூஜா மந்திரத்தாலும் ஆசமனத்தாலும் தூய்மை செய்த ஒருவர் குருவழிபாடு புரிந்து சங்கல் பித்துக்கொண்டு தேகரட்சை செய்து கொள்ள வேண்டும். தேவி எழுந்தருளும் ஸ்ரீ சக்ரத்தை சுற்றிலும் மதில்களாகவும் கோட்டைகளாகவும் 44 வரிசைகளை பாவனையுடன் பூசிக்கவேண்டும். இதுவே ஸ்ரீ சக்ர பூஜையின் முதலம்சமாக கருதப்படுகிறது.

அடுத்து பூஜை செய்பவர் தமது பௌதீக உடலை மந்திரங்களின் மூலம் தெய்வீகமாக்கிக் கொள்ளவேண்டும் . விக்நோத்ஸாரணம் என்கின்ற விக்கினங்களை நீக்கிடும் வழிபாட்டையாற்றவேண்டும். இதன் பிற்பாடு தெய்வீக சரீரமெங்கும் தேவர்களை ஆவாஹித்து தெய்வமயமாக சக்திமயமாக தன்னையும் தன்னைச் சுற்றியிருக்கின்ற இடத்தையும் சாதகன் அமைத்துக் கொள்கிறான்.

உடம்பில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞா என்கிற ஆறு சக்கரங்களையும் எழுப்பி தேவதைகளை நியாஸம் செய்தல் வேண்டும். இவ்வாறு பதினெட்டு வகையான நியாஸங்கள் உள்ளன. இங்ஙனமாக தன்னை சுத்தி செய்து தெய்வீகப்படுத்திக் கொண்ட பின்னரே, ஒருவர் ஸ்ரீ சக்ர பூஜையினுள் நுழைகிறார். ஸ்ரீ சக்ர பூஜையில் பாத்திரங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. கலசபாத்திரம், சாமான்யார்க்கிய பாத்திரம், குருபாத்திரம், சுத்திபாத்திரம், விஷேசார்க்கிய பாத்திரம், அலி பாத்திரம், பலி பாத்திரம், ஆத்ம பாத்திரம் இவ்வாறாக அப்பாத்திரங்கள் பல்திறத்தன. அவை பூஜையின் ஒவ்வொரு நிலைகளில் சாதகனால் பயன்படுத்தப்படுகிறது.

உள்ளக்கமலத்தில் உறையும் உன்னதமானவளை, மானசீகமாக உள்ளே அந்தராத்தமாவில் பூஜித்து, பின்னர் சுழுமுனை வழியே பிரமரந்திரம் வரை கொண்டு சென்று உபசாரங்கள் வழங்கி நாசித்துவாரங்களின் வழியே திரிகண்ட முத்திரையில் குவித்து, புஷ்பாஞ்சலியுடன் புகுவித்து, புறத்தே அமைந்துள்ள **ஸ்ரீ சக்ரமஹாயந்திர மத்தியில் ஆவாஹனஞ் செய்வர்.**

சதுஷ் ஷஷ்டி உபசாரங்கள் என்ற **அறுபத்து நான்கு உபசாரங்களை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு வழங்கி பூஜித்து, அம்பாளை சுற்றி எட்டெட்டு வரிசையில் சேரும் ஆவரண சக்திகளை பூஜிப்பர். இது பரிவார்ச்சனை எனப்படும். நிறைவாக **நவாவரண பூஜையும், லலிதா சக்ஸ்ரநாம அஸ்ட திரிசதி நாம அர்ச்சனையும் நைவேத்யத்துடன் விசேட பூஜையும் செய்வர். அதன் பின் பலிதானம், சுவாஸினீ பூஜை என்பனவற்றையும் செய்வார்.**

**29. நவாவரண பூஜை என்றால் என்ன?**

**ஒன்பது கோணங்களை ஒளிப்பிரவாகமாகக் கொண்டது நவாவரணம். இந்த ஒன்பது கோணங்களின் விரிவாக்கமே 43 முக்கோணங்கள். 44வது இடம் பிந்து ஸ்தானம்.**

அம்பிகை, **தனது** நாயகனாகிய காமேச்வரனின் இடது தொடையாகிய **ஸாம்பவீ பீடத்தில் அமர்ந்து தன்னை வேண்டுவோர்க்கு அருள்பாலிக்கும் இடம்.**

ஆவரண பூஜையானது சமயாசார முறைப்படி பூபுரத்திலிருந்து தொடங்கி பிந்துஸ்தானம் வரை ஸம்ஹாரக் கிரமத்தில் பூஜிக்கப்படுகிறது. ஆவரணம் என்றால் மறைப்பு. எல்லா மறைப்புகளும் நீங்கும் வரை அப்பியாசம் செய்வதே நவாவரண பூஜையாகும்.

**30. ஒன்பது ஆவரணங்களையும் விளக்குக.**

அ. **முதலாவது ஆவரணம்** நான்கு வாயில்களும் மூன்று ரேகைகளும் உள்ள சதுஸ்ரம். இது பூபுரம் எனப்படும்.

இதன் முதல் ரேகையில் தர்ம முறையான சிருங்காரம், ஹாஸ்யம், வீரம், கருணை, பயானகம் (இரக்கம்), ரௌத்திரம் (கோபம்), பீபத்ஸம் (துக்கம்), அற்புதம், சாந்தி என்ற ஒன்பதும், அனிமா, லகிமா, மஹிமா, ஈஸித்வ, வஸித்வ, ப்ரகாதம்ய்பு, புத்தி, இச்சா, ப்ராப்தி ஸர்வாகம சித்தி என்ற ஒன்பது தேவதைகள் ஆக உள்ளனர்.

**இரண்டாவது** ரேகையில், காமம், குரோதம், லோபம் மோகம், மதம், மாற்சரியம், புண்ணியம், பாவம் ஆகிய எட்டு குணங்கள்

1. ப்ராஹ்மி
2. மாஹேஸ்வரி
3. கௌமாரீ
4. வைகூஷ்ணவீ
5. வாராஹீ
6. மாஹேந்திரி
7. சாமுண்டா
8. மஹாலக்ஷ்மி

என்ற பெயருடைய "மாத்ருகா சக்தி" களாக இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாவது ரேகையில்** தேகத்தில் உள்ள மூலாதாரம், ஸ்வாதிஸ் டானம், மணிபூரகம், அநாஹதம், விசுக்தி, ஆஞ்ஞை என்ற ஆதாரங்களிலும், மூலாதாரத்தின் கீழ் இருக்கும் குல சகஸ்ரமும், சிரசில் உள்ள அகுல ஸகஸ்ரமும், இந்திர யோனி என்ற உள்நாக்கு இவைகளின் சேர்க்கை ஒன்றும் சேர்ந்து பத்து ஆதாரங்களாக "ஸர்வஸம்ஷோபினி முதல் ஸர்வதிரிகண்ட" வரை பத்து முத்ரா சக்திகளாக இருக்கிறார்கள்.

இவ்வாறு அட்டமா சித்திகள் அஷ்டமாதர்கள், பத்து முத்ரா சக்திகள் என இவர்களை முதலாவது ஆவரணத்தில் பூஜிக்க வேண்டும்.

சித்சக்திக்கு இந்த சக்கரத்தில் "ப்ரகடயோகிறநீ" என்று பெயர்

ஆ. **இரண்டாவது ஆவரணம்** பதினாறு இதழ்களையுடையது. ஐந்து பிராணன், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனது, ஆக பதினாறு இதழ்கள். (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் என்ற ஐந்தும் கண், காது, நான்கு, வாய், கை, கால், பாய (மலத்துவாரம்), உபஸ்தம் (உற்பத்தி ஸ்தானம்), தோல், அக்கிராணம் என்ற பத்தும் பலவித விஹாரங்களை அடையக்கூடிய தன்மை ஒன்றும் சேர்த்து பதினாறாகியது.

இந்தப் பதினாறும் பதினாறு இதழ்கமலத்தில் "காமகர்ஷிணி முதல் சரீராகர்ஷினி என்ற தேவிகளாக இருக்கிறார்கள்.

சித் சக்திக்கு இங்கு "குப்தயோகினி" என்று பெயர்

இ. **மூன்றாவது ஆவரணம்** எட்டு இதழ்களையுடையது. மஹா தத்துவம், அஹங்காரம், ஐந்து தன்மாத்திரைகள், ஐம்பூதங்கள், பத்து இந்திரியங்கள், அந்தக்கரணம், ஜீவன் என்ற எட்டும் இவ்வாவரணத்தின் எட்டு இதழ்களாகும். இங்கு அனங்க குசுமாதேவி முதல் அனங்க மாலினிதேவி வரை எட்டு தேவிகள் "குப்ததர யோகினிகள்" எனப்படுகிறார்கள். இந்த சக்கரம் சிவபெருமானை தத்துவமாகக் கொண்டது. இச்சக்கரத்திலுள்ள யோகினிகள் மிகவும் பயங்கரமானவர்கள்.

சித் சக்திக்கு இங்கு "குப்ததரயோகினி "என்று பெயர்

ஈ. **நான்காவது ஆவரணம்** பதினான்கு முக்கோணங்களை உடையது ஆதிகுருவும் ஜகத் காரணருமாகிய பரமேஸ்வரர் 14 புவனங்களிலும் விளங்குவதை இவ்வாவரணம் குறிப்பிடுகிறது. இவ் விளக்கத்தை காண்பதே சிறந்த சௌபாக்கியமாதலால் இது ஸர்வ சௌபாக்கிய தாயக சக்ரம் எனப்படுகிறது. ஸர்வஸம் ஷோபினி முதல் ஸர்வதவந்த்வ ஷயங்கரி என்ற பதினான்கு ஸ்ம்ப்ரதாய யோகினிகளாக, ஸர்வஸௌபாக்கிய தாயகம் என்ற பதினான்கு இதழ் சக்கரத்தில் இருக்கிறார்கள்.

இங்கு சித்சக்திக்கு "ஸ்ம்ப்ரதாயயோகினி" என்று பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. **ஐந்தாவது ஆவரணம்** பத்து முக்கோணங்களை உடையது. இங்கு கிச் சக்திக்கு "குலோத்தீர்ண யோகினி" என்று பெயர். குலம் என்பது ஞானபரம்பரை உத்தீர்ணம் என்றால் நன்கு விருத்தி செய்தல். ஆகவே ஸ்த்குரு லாபமும் குருசிஷ்ய பரம்பரையின் வளர்ச்சியும் இவ்வாவரண பூசையின் சிறந்த பயனாகும். இதுவே பரமபுருஷத்தத்தை அருள்வதால் இது ஸர்வார்த்த ஸாதக கச்ரம் எனப் பெயர் பெற்றது.

ஊ. **ஆறாவது ஆவரணமும்** பத்து முக்கோணங்களையுடையது. ஜீவனைத் தன் உண்மை ஸ்வரூபத்தில் இருக்கச் செய்து மறுபடியும் அவனுக்கு துவைத பாவனையால் உண்டாகும். பயம் ஏற்படாமல் காப்பதால் இந்தச் சக்கரத்திற்கு "ஸ்ர்வ ரக்ஷாகர சக்ரம்" எனப் பெயர் பெற்றது.

இங்கு சித்சக்திக்கு "நிகர்ப்பயோகினி" என்று பெயர்

சிச் சக்தி இருதய குகையில் இரகசியமாக இருப்பதால் இப்பெயர் ஏற்பட்டது.

எ. **ஏழாவது ஆவரணம்** எட்டுக்கோணங்களையுடையது. ஸர்வ ரோகங்களுக்கும் அடிப்படை காரணமாகிய அக்ஞானத்தை போக்கினால் எல்லா ரோகங்களும் தானே நீங்கும். எனவே இது ஸர்வரோகஹர சக்ரம் எனப்படுகிறது. இவ்வாவரணத்தில் எட்டு வித வாக்தேவிகள் அம்பிகையை கதை, காவியம், இசை நாடகம், வேதாந்த ஸ்தோத்திரங்கள் முதலியவைக ளால் சந்தோசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆவரணத்தில் பூஜை செய்யும்பொழுது சிவப்பு மலர்களையே உபயோகிக்க வேண்டும்.

இங்கு சித்சக்திக்கு "ரஹஸ்ய யோகினீ" என்று பெயர்

ஏ. **எட்டாவது ஆவரணம்** முக்கோண வடிவானது. ஸ்ரீசக்ரத்தில் உள்ள மூன்று முக்கோணங்களில் இது 43 ஆவது முக்கோணம். இந்த ஒரு அவரணத்தில் மட்டுமே புருஷதெய்வங்களுக்க இடமுண்டு. இதற்கு "ஸர்வ ஸித்திப்ரத" சக்ரம் என்று பெயர். ஸர்வ சித்தி என்று கூறத்தக்க ஜீவப்பிரம்ம ஐக்கியம் நிதித்தியாஸனப் பழக்கத்தால் ஏற்படுவதால் இது ஸர்வஸித்திப் பிரத சக்ரம் எனப்படுகிறது.

இங்கு சித்சக்திக்கு "அதிரஹஸ்ய யோகினி" என்று பெயர்

எட்டாவது அவரண திரிகோணத்தின் மூன்று மூலைகளிலும் மூன்று ப்ரதான சக்திகள் இருக்கின்றனர். முக்கோணத்தில் பூஜிக்கும் பொழுது கீழ், வலது, இடது, பிந்து என்ற முறையில் பூஜிக்க வேண்டும். உலகில் மூன்றாக இருப்பதெல்லாம் இந்த சக்திகளின் அம்சமாகும்.

ஒ. **ஒன்பதாவது ஆவரணம்** ஸ்ரீசக்ரத்தின் மத்தியில் நடுநாயகமாக உள்ள பிந்து வடிவமாகும். இதற்கு ஸர்வானந்தமய சக்ரம் என்று பெயர். அதாவது எல்லா ஆனந்தங்களுக்கும் எல்லை நிலமாயிருப்பதால் இது "ஸர்வானந்தமய சக்ரம்" எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஜை ஆரம்பத்தில் த்வைத பாவத்திலிருந்த ஸாதகன் முடிவில் அத்வைத பாவமாக அதாவது **சக்தி ஸ்வரூபமாக மாறி, சைதன்ய ரூபத்தில் சக்தியை உணர்கிறான்.**

இந்த சைதன்ய ரூபமானது நாசித்துவாரங்கள் மூலமாக ப்ரஹ்மரந்திரத்திற்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஸுஷும்னா நாடி வழியாக மூலாதாரத்தையடைந்து குண்டலினீ ரூபம் பெற்று ஸாதகனுடன் கலந்து முன்பிருந்த ப்ரஹ்மமாகவே மாறிவிடுகிறது. அது சமயம் ஸாதகன் உலக பந்த, பாசங்களிலிருந்து விடுபட்டு, **தான் ப்ரஹ்மம் என்பதை உணர்கிறான். தான் ப்ரஹ்மம் என்பதை எடுத்துக்காட்டுவதே இந்த நவாவரண பூஜையாகும்.**

இங்கு சித்சக்திக்கு "பராபராதி ரகஸ்ய யோகினி" என்று பெயர்.
அதாவது, வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாத ஸ்வரூபமாகையால் இப் பெயர் பெற்றது.
நவாவரண பூஜை நடைபெற்றதும் அம்பாள் தீபாராதனை பூஜை நடைபெற்று அம்பாள் உற்சவம் பக்தி பூர்வமாக நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பெரும்பாலான ஆலயங்களில் ஸ்ரீசக்ர பூஜை மிகச் சிறப்பாக பக்திபூர்வமாக நடைபெற்று வருகிறது. எனவே நாம் ஒவ்வொருவரும் மன ஒருமைப்பாட்டுடன் உண்மை, நேர்மையைக் கடைப்பிடித்து ஸ்ரீமந்திர ராஜம், ஸ்ரீவித்யா ராஜம் எனும் படிகளின் மூலம் ஸ்ரீசக்ர ராஜத்தில் கோட்டைகளாலும், சக்ரங்களாலும் சூழப்பட்டு பிந்து ஸ்தானத்தில் இருக்கும் லலிதா பரமேஸ்வரியை அடைந்து எமது இறுதி இலட்சியமாகிய சிவசக்தி ஐக்கிய நிலையை அடைவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமலாம்பிகையின் சேவையில்

உபாசகராக...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின்
கோபுர வாசல்
2006 இற்கு
முன்னைய நிலை





ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா
இராஜ கோபுரத்திற்கான
அடிக்கல் நாட்டல்...

தற்போதைய நிலை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்


1. ஸ்ரீ மகாமேரு மகிமை - ஏ.க. கெஜேந்திரன்

2. ஸ்ரீ வித்யா - உரையாசிரியர் அண்ணா

3. ஸ்ரீவித்யா மஹா யாக்கிரமம்
தேவி நவாவரண பூஜை - "நஜன்" (என். நடராஜன்)

4. ஸ்ரீ சக்ர ராஜம்
ஸ்ரீ மந்திர ராஜம்
ஸ்ரீ வித்யா ராஜம் - பரமஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் சுவாமிகள்

5. ஸ்ரீ சக்ர பூஜா ப்ரயோகம் - பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்கள்

6. ஸ்ரீ சக்ர பூஜா விதி - சிவாகம வித்யாபூஷணம்
திருமலை சிவஸ்ரீ இ.கு.பூர்ணானந்தேஸ்வர குருக்கள்

7. அம்பிகை வழிபாடு - சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள்

8. இந்து கலைக்களஞ்சியம்

9. மதுரைத்தமிழ் பேரகராதி


ஆலோசனை

1. சிவபதமெய்திய இலக்கிய கலாநிதி பண்டிதர் கா.வைத்தீஸ்வரக்குருக்கள்
ஈழத்துச் சிதம்பரம்
2. வைதீக வித்யாபூஷணம் சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் - மயிலணி
3. வியாகரண சிரோன்மணி பூரண தியாகராஜக் குருக்கள்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

श्रीभगवानुवाच ।
अशोच्यानन्वशोचस्त्वं प्रज्ञावादांश्च भाषसे ।
गतासूनगतासूंश्च नानुशोचन्ति पण्डिताः ॥२-११॥

உன்னைக் கொல்லவந்தவர்களை
நினைத்து வருத்தப்படுகிறாய்
ஞானிகளைப் போலவும் பேசுகிறாய்.
ஆனால் ஞானிகள் உன்னைப்போல
இறப்பவர்களை நினைத்து வருந்தமாட்டார்கள்.
நீயோ, இங்குள்ள யாருமோ
ஒருபோதும் இறப்பதில்லை.
உடல் அழிந்தாலும்
நீ அழிவதில்லை.
இது ஞானிக்குத் தெரியும்.

ஸ்ரீ பகவத்கீதா 2:11

Printed by: Jeyasri, 0212219129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org